ඩිජිටල් ආර්ථික අමාත්‍යාංශය
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
MINISTRY OF DIGITAL ECONOMY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹூருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. DRP/OP/10/15/03

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2025.06.27

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

சகல பிரதேச செயலாளர்களுக்கும்,

**<u>தேசிய அடையாள அட்டையை தயாரிக்கும் போது பொலிஸ் அறிக்கையை சமர்ப்பித்தல்.</u>**

தேசிய அடையாள அட்டை தொலைந்து போனால் தேசிய அடையாள அட்டையின் இணைப்பிரதிக்கு விண்ணப்பிக்கும் போது 12 இலக்கங்களை கொண்ட புதிய தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பெற்ற விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படும் பொலிஸ் அறிக்கையில், 12 இலக்கங்களை கொண்ட புதிய தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். மேலும், அத்தகைய விண்ணப்பதாரர் முன்னர் V அல்லது X என்ற எழுத்துடன் பெறப்பட்ட தேசிய அடையாள அட்டை எண்ணை பொலிஸ் அறிக்கையுடன் சமர்ப்பித்தால், பொலிஸ் அறிக்கையை சரிசெய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

02. மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் பொலிஸ் முறைப்பாடு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மறந்து விட்டால், பொலிஸ் அறிக்கையில் "இலக்கம் ஞாபகம் இல்லை" என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. எனவே, இனிமேல் தொலைந்து போன தேசிய அடையாள அட்டைகளை மீண்டும் தயாரிப்பதற்காக முன்வைக்கப்படுகின்ற விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்படும் பொலிஸ் அறிக்கையில் விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்குமாறு அனைத்து கிராம அலுவலர்களுக்கு அறியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். பொலிஸ் அறிக்கையின் மூலப்பிரதியை இந்தத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தொடர்பில் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பினை மேலாகக் கருதுகின்றேன்.

**எம்.எஸ்.பீ.சூரியப்பெரும (ப.க)**
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :

01. செயலாளர், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு - தெ.கொ
02. செயலாளர், பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தெ.கொ
03. சகல மாவட்ட செயலாளர்கள் - தெ.கொ
04. பொலிஸ் மா அதிபர், பொலிஸ் தலைமையகம் - தெ.கொ
05. கணக்காய்வாளர் நாயகம் - தெ.கொ
06. சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள் (ஆ.ப.தி) - தெ.கொ மற்றும் அலுவலக பணிகுழாமிற்கு தெரியப்படுத்துவதற்கு
07. பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆ.ப.தி.அ.உத்தியோகத்தர்கள் - தெ.கொ மற்றும் உ.ந

දුරකථන / தொலைபேசி / Telephone (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web www.drp.gov.lk